**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-06022021-4421

Volume: 6

Issue: 2

Month: October

Year: 2021

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 05.08.2021

Accepted: 10.09.2021

Published: 01.10.2021

Citation:
Vijayamala, T. "Kotta Sculpture - Arthanariswarar (Thiruvelvikudi Temple for Special Purpose)." *Shanlax International Journal of Tamil Research,* vol. 6, no. 2, 2021, pp. 146–51.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i2.4421

*Corresponding Author:
vijayamalatt@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Kotta Sculpture - Arthanariswarar (Thiruvelvikudi Temple for Special Purpose)

**Dr. T. Vijayamala**
*Architect Researcher*
https://orcid.org/0000-0002-3917-4994

**Abstract** - Tiruvelvikudi Temple is the 23rd northernmost temple of the Cauvery in Chola. The temple is located in Tiruvelvikudi, about 10 km northeast of Kuthalam in the Kuthalam circle of the Mayiladuthurai district. It is the place where the marriage ceremony to Lord Shiva took place. Therefore, this place is also known as Velvikudi and Gautama Bandana Sethiram as it is dedicated to Pratiyar (Parvati Devi). Currently known as Tiruvelvikudi and Thirulakudi.1

**Keywords:** Kotta Sculpture, Arthanariswarar, Chola, Lord Shiva, marriage ceremony, Tiruvelvikudi

**References**

1. Gopinatha Rao, T.A., Elements of Hindu Iconography, Vol, Part l, P.332.
2. Sirppa Rathinam, Athiyayam 22.

# கோட்டச் சிற்பம் – அர்த்தநாரீஸ்வரர்: சிறப்பு நோக்கில் திருவேள்விக்குடி கோயில்

*முனைவர் தி. விஜயமாலா*
சிற்பக்கலை ஆய்வாளர்

***ஆய்வுச் சுருக்கம்***

*சோழநாட்டில் காவிரியின் வடக்கரை தலங்களில் 23 ஆவது தலமாக திருவேள்விக்குடிக் கோயில் அமைந்துள்ளது. இக்கோயில் மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் வட்டம் குத்தாலத்திலிருந்து வடகிழக்கில் சுமார் 1கி.மீ தொலைவில் திருவேள்விக்குடி அமைந்துள்ளது. இத்தலம் சிவனுக்கு திருமணவேள்வி நடந்த இடமாகும். ஆதலால் இவ்வூரை வேள்விக்குடி என்றும், பிராட்டியாருக்கு (பார்வதிதேவி) கங்கணாதாரணம் செய்தபடியால் கௌதுகா பந்தன சேத்திரம் என்றும் கூறப்படுகின்றது. தற்போது திருவேள்விக்குடி மற்றும் திருலக்குடி என அழைக்கப்படுகின்றது.*[1]

***முக்கியச்சொற்கள்:*** *கோட்டா சிற்பம் அர்த்தநாரீஸ்வரர் சோழன் சிவன் திருமண விழா திருவேள்விக்குடி*

இக்கோயிலின் இலக்கியச் சான்றாகப் பக்தி இலக்கியங்கள் இடம்பெறுகின்றன. குறிப்பாக பன்னிரு திருமுறைகளில் திருஞானசம்பந்தர் எழுதிய மூன்றாம் திருமுறைகளில் 348 ஆவது பதிகத்தில் 11 பாடல்களும் சுந்தரர் எழுதிய ஏழாம் திருமுறைகளில் 20 பாடல்களும் பாடப்பெற்றுள்ளன.[2] மேலும் இக்கோயிலின் வரலாற்றினை அறிவதற்குக் கல்வெட்டு சான்றுகள் அமைகின்றன. குறிப்பாக கி.பி 9-ம் நூற்றாண்டின் உத்தமசோழன் (கி.பி 970-985) முதல் 12 ஆம் நூற்றாண்டின் மூன்றாம் இராஜராஜசோழன் (கி.பி 1216-1256) வரை, 44 கல்வெட்டுகள் இடம் பெற்றுள்ளன. உத்தமசோழனின் ஆறு கல்வெட்டுகளில் விளக்குதானம், 400 கலஞ்சு வெள்ளி தானம், 2. காசு தானம், 142 கலஞ்சு நிலம் மற்றும் விளக்குதானம், 30 காசு இறைவனின் வழிப்பாட்டிற்க்கு கொடுக்கப்பட்ட செய்திகளும், 3. முதலாம் இராஜேந்திரசோழன் இரண்டு கல்வெட்டுகளில் நிலவரி மற்றும் விளக்கு ஏற்றி வைப்பதற்கு தானம் கொடுத்த செய்திகளும், 4. இராஜாதிராஜசோழனின் ஒரு கல்வெட்டுகளில் நிலவரி செய்திகளும், 5. இரண்டாம் இராஜேந்திர சோழனின் மூன்று கல்வெட்டுகளில் உடன்படிக்கை செய்திகளும், 6. அதிராஜேந்திரனின் கல்வெட்டில் 4 மா நிலம் அளித்த செய்திகளும், 7. முதலாம் குலோத்துங்க சோழனின் கல்வெட்டில் உடன்படிக்கை செய்திகளும், 8. விக்ரமசோழனின் மூன்று கல்வெட்டுகளில் நிலவரி செய்திகளும், 9. இரண்டாம் இராஜாதிசோழனின் கல்வெட்டில் விளக்கு தானம் அளித்த செய்தியும், 10. மூன்றாம் இராஜராஜனின் கல்வெட்டில் இராஜகேசரி என்ற சோழமன்னனின் புனைபெயரும் இடம் பெற்றுள்ளது.

## கோயிலின் சிற்பக்கலை அமைப்பு

தமிழகக்கலை வரலாற்றின் சோழர் காலத்தில் படைக்கப்பட்ட சிற்பங்கள் அனைத்து கலையின் அடிப்படையிலும் புராணப் பின்னணி ஆகமங்களின் அடிப்படையிலும் தனிதன்மை பெற்ற சிற்பக்கலைகளாக அமைந்துள்ளன. அருவுருவமான சிவலிங்கத்தில் தொடங்கி அழகுடன் திகழும் பல்வேறு இறைவுருவங்கள் ஒவ்வொன்றும் குறிப்பிடத்தக்க கலைப்பாணிகளில் திகழ்கின்றன. அவ்வகையில் திருவேள்விக்குடி

மணவாளேஸ்வரார் கோயில் கருவறையில் லிங்கம் அமைந்துள்ளது. தேவக்கோட்டப் பகுதியில் தெற்குப்புறம் தட்சிணாமூர்த்தி சிற்பமும், மேற்குபுறம் லிங்கோத்பவர் சிற்பம் இச்சிற்பத்தின் வலது புறம் அர்த்தநாரீஸ்வரர், இடது புறம் அரி அரர் சிற்பமும், வடக்குபுறம் பிரம்மா சிற்பமும் உள்ளன. அர்த்தமண்டபத்தின் நுழைவாயிலின் இருபுறத்தில் துவார பாலகர் சிற்பமும், தெற்குப்புற தேவக்கோட்ட பகுதியில் நடராஜர், கணபதி, அகத்தியர் முதலிய சிற்பங்களும், வடக்குப் புறத்தில் சண்டேச அனுகிரக மூர்த்தி, துர்க்கை, பிட்சாடனர் முதலிய சிற்பங்களும் அமைந்துள்ளன. மகாமண்டபத்தின் தெற்கு புறத்தில் வடக்கு நோக்கியவாறு நால்வர் சிற்பங்களும், வடக்கு புறத்தில் தெற்கு நோக்கியவாறு நடராஜர் செப்பு திருமேனி சிற்பமும் உள்ளன. முகமண்டபத்தின் வடக்கு புறத்தில் மேற்கு நோக்கி பார்த்தவாறு பைரவர், சூரியன் ஆகிய சிற்பங்களும், திருச்சுற்றுப் பிரகாரத்தில் தென் மேற்குப் புறத்தில் வலஞ்சுழி விநாயகர் சிற்பமும் மேற்குப் புறத்தில் கிழக்கு நோக்கி பார்த்தவாறு சுப்ரமணியர் வள்ளி தெய்வானை, கோதண்டராமர், கஜலெட்சுமி, சண்டேச அனுகிரக மூர்த்தி முதலிய சிற்பங்களும், இக்கோயிலின் வட கிழக்கு புறத்தில் தெற்கு நோக்கியவாறு அம்மன் சுகந்த நாயகி மற்றும் ஈசான மூர்த்தி அமைந்துள்ளன. இதனைத் தொடர்ந்து வரசித்தி விநயாகர், நந்தி பலிபீடம், இராஜகோபுரம் அமைந்துள்ளன.

சோழர்காலத்து சிற்பங்கள் பெரும்பாலும் கோயிலின் அர்த்தமண்டப தேவக்கோட்டங்களிலும், பரிவார கோயிலிலும் அமைந்துள்ளன. இக்கோயிலின் மேற்கு புறத்தேவக்கோட்டத்தின் லிங்கோத்பவர் சிற்பத்தின் வலது பக்கக் கோட்டத்தில் அர்த்தநாரீஸ்வரர் சிற்பம் அமைந்துள்ளது.

## அர்த்தநாரீஸ்வரர்

சிவ கோலங்களில் சரிபாதியாக உமை இணைந்திருக்கும் கோலம் அர்த்தநாரீஸ்வரர் என்று அழைக்கப்படுகிறது. அர்த்தநாரீஸ்வரரின் வலப்பாகம் சிவனுக்குரியதாகவும், இடதுப்பாகம் உமைக்கு உரியதாகவும் அமைகிறது. பெண்ணின் பாதியாக இச்சிற்பம் அமைவதால் அர்த்தநாரீஸ்வரர் எனப்படுகிறது.[12] அர்த்தநாரீஸ்வரரின் கோலத்தினைப் பற்றி சங்க இலக்கியங்களில் அகநானூறுப்பாடலில்

**“ஊர்ந்தது ஏறே சேர்ந்தாள் உமையே**

என்றும்,[13]

புறநானூறு பாடலில்

**பெண்ணுரு வொருதிற னாகின் றவ்வுருத்**
**தன்னு ளடக்கிக் கரக்கினுங் கரக்கும்**

என்றும் [14]

ஐங்குறுநூறுப் பாடலில்

**நீலமேனி வாலிழை பாகத் தொருவன்**

என்றும்[15]

கலித்தொகையில்

**ஈர்ஞ்சடை யந்தணன் உமையமர்ந்து**
**யர்மலை இருந்தனன்[16]**

திருமுருகாற்றுப்படையில்

**உமையமர்ந்து விளங்கு மிமையா**
**முக்கண்[17]**

என்று இவ்விலக்கியங்களில் வாயிலாக அறிய முடிகிறது.

சிலப்பதிகாராத்தில்

**பாகம் ஆளுடையாள் பலி முன்றிலே**

என்னும் வேட்டுவரியில் ஆண்பாதி, பெண்பாதி என்னும் தத்துவத்தை உணர்த்துகின்றன[18] பக்தி இலக்கியத்தின் தேவாரப்பதிகங்களில் திருஞானசம்பந்தர் பாடிய முதல் மூன்று திருமுறைகளில்

**மலைபுரிந்த மன்னவன்தன்**
**மகளை ஓர்பால் மகிழ்ந்தாய்[19]**
**கொண்டலாகும் புனல் சேர்த்து**
**உமையாளொடும்[20]**
**மங்கையாள் உடனாகவே[21]**

திருநாவுகரசர் பாடிய நான்கு முதல் ஆறுவரை உள்ள திருமுறைகளில்

**நங்கையைப் பாகம் வைத்தார்[22]**
**மற்றுவைத் தாயங்கொர் மாலொரு பாக மகிழ்ந்துடனே[23]**
**வடிவு உடைவாள் நெடுங்கண் உமையாளை ஓர்பால் மகிழ்ந்து[24]**
**மங்கையொர்பாக மகிழ்ந்து டையான்[25]**
**மறங்கொள் வேல்கண்ணி வாள்நுதல் பாகமாய்[26]**
**மருவை வென்ற குழல்மடவாள் பாகம் வைத்த[27]**
**நேரிழையை யொருபாகம் வைத்தார் தாமே.[28]**

அர்த்தநாரீஸ்வரர் வடிவத்தினைப்பற்றி திருஞானசம்ந்தர், திருநாவுக்கரசர் போற்றி புகழ்ந்துள்ளார்.

சிவபுராணம் அர்த்தநாரீஸ்வரர் பற்றி கூறுகையில் பிரம்மன் பிரபஞ்சத்தை படைக்கையில் உயிரினங்களையும், தாவர விலங்கினங்களையும் படைத்தார். அவை அனைத்தும் ஆண் உயிரினங்களாகவே தோன்றின. ஆகையால் பிரபஞ்ச உற்பத்தி இல்லை என்பதனை பிரம்மன் உணர்ந்தார். பிரம்மனின் வேண்டுகோளுக்கிணங்க சிவபெருமானின் உடலில் பாதியை சக்திக்கு அளித்து ஒன்றிணைந்த உருவத்தின் தேவையை அறிந்து பாதி ஆணாகவும் (சிவன்) பாதி பெண்ணாகவும் (பார்வதி) படைத்து பிரபஞ்சத்தின் உயிர் உற்பத்தியினை செவ்வனே நடைபெறச் செய்தார்.

மற்றொரு குறிப்பில், ஒரு சமயம் கைலாயமலை மீது பார்வதி தேவியுடன் சிவபெருமான் அமர்ந்திருந்தார். அப்பொழுது சிவனைக் காணவந்த பிருங்கிமுனிவர் சிவனை மட்டும் வணங்கி வலம் வந்தார். ஆனால் பார்வதி தேவியை வணங்கவில்லை. அதனால் பார்வதி தேவி கோபமடைந்தார். சினம் கொண்ட பார்வதி தேவி பிருங்கியின் உடலில்உள்ள சதை மற்றும் இரத்தம் நீங்குமாறு சாபமளித்தார். பிருங்கி முனிவர் சதையும் இரத்தமும் நீங்கி எலும்புத் தோல் பொருந்திய உடம்பினைப் பெற்றார். சிவன் தன்னுடைய மெய்க்காவலரின் தளர்வடைந்த நிலையினைக் கண்டு இரக்கமுற்றார். சிவபெருமான் பிருங்கி முனிவருக்கு மூன்றாவது காலாக ஊன்றுகோலினை அளித்தார். அதனைப் பெற்ற முனிவர் மகிழ்ச்சியடைந்து சிவபெருமானின் முன்பாக பக்தியினை செலுத்தினார்.

இதனைக்கண்ட பார்வதிதேவி மனம் வருந்தி சிவபெருமானின் பாதி உருவத்தினையை அடைய வேண்டும் என்று கருதி சிவனை நோக்கி கடுமையான தவத்தினை மேற்கொண்டார். சிவபெருமான் மணமகிழ்ந்து தன் உடலில் பாதியினைத் தருவதாக வரம் அளித்தார். பார்வதி தேவி சிவனுடன் அர்த்தநாரீஸ்வராக காட்சியளித்தார். பிருங்கிமுனிவர் இருவரையும் வணங்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

அர்த்தநாரீஸ்வரின் படிமக்கலைக் கூறுகளை அம்சுமத் போதகமம், காமிக்காகமம், சுப்ரபேதாகமம், சில்பரத்தினம், காரணாகமம் ஆகியவற்றில் விளக்கப்பட்டுள்ளது. சிவனின் வலது பாதி ஆண் உருவாமாகவும், பாதிபெண் உருவமாகவும் இருக்கும் சிவனின் வலது பாதியின் தலையில் சடாமுடி தரித்தித்து அவற்றின் மேல் பிறைச்சந்திரன் இடம் பெறும் வலது காதில் சர்ப குண்டலமும் வலது நெற்றியில் பாதி கண்ணும் (நெற்றிகண்) காணப்படவேண்டும்.

பொதுவாக இரண்டு, மூன்று, நான்கு கரங்களுடன் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். வலது கரங்களில் அபயம், பரசு அல்லது வரதம், சூலம் அல்லது மழு, அபயம் அல்லது இடபத்தின் தலையின் மீது ஊன்றியவாறும் மற்றொன்று அபயம் வைத்திருக்க வேண்டும்.

அல்லது சூலம், அக்சமாலை வலது கரத்தில் வைத்திருந்தால் சிவன் பாகத்தில் வரதம் அல்லது கபாலம் அமைந்திருக்கும். வலது பக்கத்தில் சிவனுக்குரிய ஆடை அணிகலன்கள் அணிந்திருக்கும். வலது பாதியில் புலித்தோள் ஆடையும், மார்பில் யக்ஞோபவீதமும் அணிந்திருக்க வேண்டும். இடையில் நாகத்திலான (சர்பம்) மேகலை அணியப்பட்டிருக்கும் வலது பக்க உடலில் திருநீர் பூசப்பட்டிருக்கும் வலது கால் சற்று வளைத்து தேவியின் உயரத்திற்கேற்ப பத்மாசனத்தில் நின்றவாறு அமைக்கப்பட்டிருக்கும். வலது பக்க சிவனின் முகத்தோற்றம் சிவப்பு வண்ண மேனியராகக் காணப்படும். சிவபெருமான் இடது புறம் கையில் கிளி, கண்ணாடி புத்பலம் (நீல அல்லிமலர்) ஏதேனும் ஒன்றினை வைத்திருக்கவேண்டும். அர்த்தநாரீஸ்வரர் படிமம் இரண்டு கரங்கள் மட்டும் தரித்திருந்தால் இடது கை தொங்கவிட்டவாறு அமைந்திருக்கும் இரத்தினங்களால் ஆன ஆபரணங்கள் அணிவிக்கப்பட்டிருக்கும்.

பார்வதி தேவியின் பாதியான இடது புறத்தின் தலையில் கரண்ட மகுடம் நெற்றியின் இடதுபுறம் அரை திலகம், இடது காதில் குண்டலமும், (இடது புறம் கையில் கிளி, கண்ணாடி, பத்பலம் (நீல அல்லிமலர்) ஏதேனும் ஒன்றினை வைத்திருப்பார்) இடது பாதி பாதம் வரை ஆடையணிந்தும் கிளி பச்சை அல்லது அடர்ந்த நிறமுடையவராக அமைக்கப்பட்டிருக்கும் சாந்நமான முகத்தோற்றத்துடனும் பத்மாசனத்தில் நின்றவசாறு அமைக்கப்பட வேண்டும்.[29]

அர்த்தநாரீஸ்வரர் வடிவத்தினைப் பற்றி சிற்பரத்தினம் குறிப்பிடும் போது சிவன் வலது புறமும், உமை இடது புறமும் இணைந்த வடிவமாக காணப்படும். வலது வெற்றியில்அரைக்கண்ணும், இடது நெற்றிச் சுடியும், இடதுப்புற இடையில் சித்திரவர்ண ஆடை அணியவேண்டும் என்று குறிப்பிடுகின்றது.[30] தமிழகத்தில் பல்லவர் காலத்தில் கட்டப்பட்ட மகாபலிபுரம் தர்மராசரதத்தின் முதல் தளத்தில் அர்த்தநாரீஸ்வரர் படிமம் அமைந்துள்ளது. இதனைத் தொடர்ந்து பாண்டிய மன்னரால் கட்டப்பட்ட திருப்பரங்குன்றம் உமையாண்டார் கோயில் கருவறையின் பின்புறச் சுவரில் புடைப்புச் சிற்பம் இடம் பெற்றுள்ளது.

முற்கால சோழ மன்னனான முதலாம் ஆதித்தன் காலத்தை சேர்ந்த கும்பகோணம் நாகேசுவரர் கோயில், திருக்காட் டுப்பள்ளி அக்னீசுவரசுவாமி கோயில், கோயிலடி திவ்யஞானேசுவரர் கோயில், திருப்பழனம் ஆபத்சகாயேசுவரர் கோயில், முதலானவற்றில் கருவறை மேற்குத் சுவர் பகுதியில் தேவக் கோட்டப் பகுதியிலும், லால்குடி சப்தரிஷ்சுவரர் கோயில் கருவறை கிழக்குத் தேவக்கோட்டத்திலும், திருநாகேசுவரம் நாகநாதசுவாமி கோயில் மற்றும் திருப்புறம்பியம் சாட்சிநாதர் கோயில் முதலானவற்றில் அர்த்தமண்டப வடக்குத் தேவக்கோட்டத்திலும் இச்சிற்பம் காணப்படுகிறது. பெரும்பாலான கோயில்களில் கருவறை மேற்கு தேவக்கோட்டத்திலேயே அர்த்தநாரி சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது.

திருவேள்விக்குடி கோயிலில் உள்ள அர்த்தநாரீஸ்வரர் சிற்பம் மேற்கு புறத்தேவக்கோட்டத்தின் வலதுபுறத்தில் இடம்பெறும் கோட்டத்தில் நின்ற நிலையில் அமைந்துள்ளது. வலதுபுறம் தேவியாவும் இடதுபுறம் சிவன் என்ற வடிவமைப்பில் காணப்படுகிறது. நான்கு கரங்களைக் கொண்டவர். வலதுகரம் அபயம் இடதுகரம் ரிஷபத்தின் மீது ஊன்றியவாறும் வைத்திருப்பார். தலையில் ஜடாமகுடம், இடதுகாதில் குண்டலம், வலதுகாதில் தோடு, கழுத்தில் அணிகலன் அணிந்து மார்பில் புணூல், இடுப்பில் ஆடையணிந்திருப்பார். ரிஷபமானது வலது புறத்திலிருந்து இடதுபுறம் பார்த்தவாறு அமைந்துள்ளது. இச்சிற்பமானது 3 அடி உயரமாகும்.

இச்சிற்பத்தின் வலதுபுறம் பெண்ணின் வடிவம் அமைந்திருப்பது ஒரு சில கோயில்களில் தான் காணப்படுகிறது. இக்கோயில் அமர்ந்திருப்பது என்றால் சிறப்பிற்குரிய ஒன்றாகக் கருதப்படுகின்றது. இப்படிமம் அமைக்கப்பட்ட காலத்தில் ஆதித்தன் கால அமைவிட மரபினை ஓரளவிற்கு தொடர்ந்திடும் வகையில் அமைந்துள்ளது எனலாம். ஏனெனில் இக்கோயிலின் மேற்குபுற கருவறை தேவக்கோட்டத்தின் மையப்பகுதியில் லிங்கோத்பவர் அமைந்துள்ள போதிலும் அதன் வலதுபுறத்தில் அர்த்தநாரீஸ்வரர் படிமம் அமைந்துள்ளது. ஏறக்குறைய 100 ஆண்டுகளுக்கு பின்னர் சிற்பி ஆதித்தன் கால படிமக்கலை கூறுகளைச் செயல்படுத்தியுள்ளது என்பது ஒரு மரபின் தொடர்ச்சியாகும்; கலைஞர்களுக்கிடையே ஏற்படுத்திய தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடியதாகும். இங்கு அமைந்துள்ள அர்த்தநாரிஸ்வரர் சிற்பத்தின் தேவியின் பாகம் வழக்கத்திற்கு மாறாக வலதுபுறம் அமைந்திருப்பது நோக்குதற்குரிய ஒன்றாகும்.

### அடிக்குறிப்பு

1. ஆ. மாணிக்கம், திருவேள்விக்குடி தலவரலாறு, ப. 2
2. பி.ரா.நாடராசன், திருஞானசம்பந்தர் சுவமிகள் (தேவாரம் 1, 2, 3 திருமுறைகள் -முதல்பகுதி), 440.
3. A R E, NO. 136,114,125,128,112,113./ 1926
4. A R E , NO. 120,140./ 1926
5. A R E , NO.119./ 1926
6. A R E , NO. 108,115,137./ 1926
7. A R E , NO.123./ 1926
8. A R E , NO.123./ 1926
9. A R E , NO.144,145,146/1926
10. A R E , NO.144,145,146./ 1926
11. A R E , NO.150./ 192
12. S.P. Tewari, Hindu Iconography, P.44.
13. அகநானூறு கடவுள் வாழ்த்து பாடல் 1:7
14. புறநானூறுபாடல் 1 வரிகள் 7-8.
15. ஐங்குறுநூறு கடவுள் வாழ்த்து பாடல் 1 வரிகள் 1,2.
16. கலித்தொகை பாடல் 38 வரிகள் 1-2.
17. திருமுருகாற்றுப்படை பாடல் 153.
18. சிலப்பதிகாரம் வேட்டுவரி 12:69.
19. முதலாம் திருமுறை 52- ஆவது பதிகம் பாடல் 4 வரிகள் 1-2.
20. இரண்டாம் திருமுறை 256- ஆவது பதிகம் பாடல் 2 வரி 2
21. மூன்றாம் திருமுறை 296- ஆவது பதிகம் பாடல் 2.
22. நான்காம் திருமுறை 30- ஆவது பதிகம் பாடல் 1 வரி 1
23. நான்காம் திருமுறை 87- ஆவது பதிகம் பாடல் 7 வரி 1
24. நான்காம் திருமுறை 84- ஆவது பதிகம் பாடல் 4 வரி 1
25. நான்காம் திருமுறை 90- ஆவது பதிகம் பாடல் 7 வரி 1
26. ஐந்தாம் திருமுறை 74- ஆவது பதிகம் பாடல் 2
27. ஆறாம் திருமுறை 91- ஆவது பதிகம் பாடல் 3 வரி 5 ஆறாம் திருமுறை 36- ஆவது பதிகம் பாடல் 9
28. Gopinatha Rao, T.A. Elements of Hindu Iconography, Vol, Part l, P. 332.
29. சிற்பரத்தினம் அத்தியாயம் 22

**திருவேள்விக்குடி கோயில்**
**அர்த்தநாரீஸ்வரர் சிற்பம்**

